மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre
பேச்சுப் போட்டி 2022
Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 8

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

தமிழன்னைக்கு சிரந்தாழ்த்தி,
உங்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இன்றைய எனது பேச்சின் தலைப்பு

## தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகள்

”மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா” – என்றார் மகாகவி பாரதியார்.



அக்காலத்தில், தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகள் உடலுக்கு உரமேற்றின; நோய்நொடிகளின்றி வாழ வழிகாட்டின; மன அழுத்தத்தை விரட்டின; மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தின. எமது பாரம்பரிய விளையாட்டுகள் வெறும் விளையாட்டுகள் மட்டுமல்ல, எமது பண்பாட்டையும் எடுத்துச் சொல்வன. விவேகம், வீரம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை இவற்றை எல்லாம் கற்றுத் தருவன. தலைமைப் பண்பு, நட்புணர்வு இவற்றை எல்லாம் வளர்ப்பன.

நமது பாரம்பரிய விளையாட்டுகளை சடுகுடு, கிளித்தட்டு, கில்லி, கபடி, சல்லிக்கட்டு, சில்லுக்கோடு, பல்லாங்குழி, எறிபந்து, கண்ணாமூச்சி, தாயம், ஆடுபுலி ஆட்டம், ஊஞ்சல் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றை ஆடவர், மகளிர், சிறுவர் விளையாட்டுகள் என வகைப்படுத்தலாம். சடுகுடு, கிளித்தட்டு, கபடி, கண்ணாமூச்சி போன்ற விளையாட்டுகள் தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன. தாயம், பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம்- விவேகத்தை வளர்க்கின்றன.

தற்போது மின்னணு சாதனங்களின் ஆதிக்கத்தால் இவ்விளையாட்டுக்கள் மறைந்து கொண்டே போகின்றன. இந்நிலை மாறவேண்டும். ”கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்பதை அனுபவரீதியாக உணர வைக்கும் எமது பாரம்பரிய விளையாட்டுகளை மீட்டெடுப்போம்! எமது தமிழ் பாடசாலைகளில் இவற்றை விளையாடி மகிழ்வோம்! என உறுதியுடன் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி சாந்தினி ஜெயதேவன்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

“கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் நந்தமிழ்”